பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 10 திங்கட்கிழமை 24.03.2025 கதிர் 136

## இது ரகசியம் அல்ல!

இலங்கை முழுவதும் அரசியல் கட்சிகளினதும் சுயேச்சைகளினதும் வேட்புமனுக்கள் இம்மை மறுமை இன்றி தாராளமாக நிராகரிக்கப்பட்டமையால் ஏற்பட்

☞2

# தமிழர் தேசத்தில் பௌத்த விரிவாக்கத்தை முன்னெடுக்கிறார் ஜனாதிபதி அநுரகுமார

## தையிட்டில் போராட்ட இடத்தில் கஜேந்திரன் குற்றச்சாட்டு

ஜனாதிபதி அநுரகுமார ஒருபுறத்திலே தான் இனவாதம், மதவாதத்துக்கு இடமளிக்கமாட்டேன் எனச் சொல்லிக் கொண்டாலும் தமிழர் தேசத்தில் மேலும் மேலும் பௌத்த விரிவாக்கல் நடவடிக்கைகளைமுன்னெடுக்கிறார்என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரன் குற்றஞ்சாடுகிறார்.

தையிட்டி திஸ்ஸ விகாரை வளாகத்துக்குள்சட்டவிரோதமாகஅமைக் கப்பட்டதாகக் கூறப்படும் மற்றொரு கட்டடம் நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய



மக்கள் முன்னணி நேற்றுப் போராட்டம் நடத்தியது.

போராட்டஇடத்தில்செய்தியாளர்களிடம் பேசிய கஜேந்திரன் மேலும் தெரிவித் ததாவது:

இன்று இராணுவத்தினரின் வாகனங்கள் ஆட்களை ஏற்றியிறக்கும் பணிகளில் அதிகளவில் ஈடுபட்டுள்ளன. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தக் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டு தொடர்ச்சியாகப் போராட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. இந்தநிலையில்இரண்டு

# தேர்தல் முறைப்பாடுகள் இதுவரையில் 3 பதிவு

உள்ளூராட்சிசபைத்தேர்தலிற்கானவேட்புமனுத்தாக்கல் நிறைவடைந்துதேர்தலுக்கானநாள்அறிவிக்கப்பட்டதிலிருந்து இதுவரை விதிமீறல் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் குறித்த 3 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தமூன்றுமுறைப்பாடுகளும்மார்ச் 21பதிவாகியுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. அதன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மார்ச 21 மட்டும் பொலிஸ் நிலையங்களில் 3 தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலத்துஓயா, கஹம்பிலியாவ மரஸ்ஸன பகுதியில் உள்ள ஒரு வீட்டின் மீது தாக்குதல்

☞2

# வேட்புமனு நிராகரிப்பு விடயத்தில் ஆணைக்குழு தலையிடவேண்டும்

## கட்சிகளின் செயலாளர்கள் வலியுறுத்து

சிறிய குறைபாடுகள் காரணமாக நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பாகதேர்தல்ஆணைக்குழுவே தலையிட்டுத்தீர்வு காண வேண்டும் என்று அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் நேற்றுக் காலை தேர்தல் ஆணைக்குழுவினரைச் சந்தித்து இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

இந்தப்பிரச்சினைகளைநீதிமன்றத்திற்குச்செல்லாமல் தீர்க்க முடிந்தால் அது மிகவும் வசதியாக இருக்கும் என்று கட்சிச் செயலாளர்கள் கூறியுள்ளனர்.

தேர்தலின்போது பணத்தை எவ்வாறு செலவிடுவது என்பது குறித்தும் இந்தக்

☞2

## அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

# வேலையற்ற பட்டதாரிகளை ஏமாற்றிவிட்டது ஆளும்தரப்பு

## 35 ஆயிரம் பேர் நடுத்தெருவில்

வாக்குகளைப் பெறுவதற்காக பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு என்று ஏமாற்றிவிட்ட இந்த ஆளும்தரப்பு 35 ஆயிரம் பட்டதாரிகளை இன்று நடுத்தெருவில் கைவிட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டினார் அனைத்துப் பல் கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர்மதுசான்சந்திரஜித்.

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை (24) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப் பின்போதுஇதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்ததாவது:

வேலையற்ற பட்டதாரிகள் தமக்கு வேலைவாய்ப்பை வழங்குமாறு கோரி வீதிக்கு இறங்கி போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். நாட்டில் தற்போது சுமார் 35 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகள் உருவாகியுள்ளனர். கடந்த கால ஆளும்தரப்புகளிடம் அரச சேவைக்கான ஆட்சேர்ப்பு

☞2

# 3 உள்ளாட்சி சபைகளுக்கு இன்று முதல் வேட்புமனு

மன்னார், பூநகரி மற்றும் தெஹியத்தகண்டி ஆகிய மூன்று பிரதேச சபை தேர்தலுக்கமான வேட்புமனுக்கள் தாக்கல் இன்று திங்கட்கிழமை தொடங்குகின்றது.

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் எதிர்வரும் வியாழக்கிழமை நண்பகல் 12 மணி வரை வேட்புமனுக்களை சமர்ப்பிக்க முடியும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் மே 6 நடைபெறவுள்ளது. இதில், 336 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் கடந்த வியாழக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது. இந்த நிலையில், மன்னார், பூநகரி, தெஹியத்தகண்டி பிரதேச சபைகளுக்கான வேட்புமனுத் தாக்கல் இன்று தொடங்குகின்றது.

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக்

☞2

## அல் - ஜசீரா நேர்காணலுக்கு மதிப்பளிப்பதன் மூலம்

# விடுதலைப் புலிகளுக்காக ஆளும்தரப்பு இராணுவத்தைக் காட்டிக்கொடுக்கின்றது

## ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. திடீர் குற்றச்சாட்டு

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்காக இலங்கை இராணுவத் தையும்போரில்உயிர்த்தியாகம்செய்த படையினரையும் சர்வதேசத்திடம் காட்டிக்கொடுப்பதற்கான செயற்பாடு களேஇந்தஆளும்தரப்பால்முன்னெடுக் கப்படுகின்றன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியா ளர்களிடம் இந்தக் குற்றச்சாட்டை

☞2

# ஜிஎஸ்பி வரிச் சலுகையை காக்க நடவடிக்கை தேவை

## ரவி கருணாநாயக்க வலியுறுத்து

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான ஜிஎஸ்பி வரிச்சலுகையை இழந்துவிடக்கூடாது. அதனைப் பாதுகாக்க ஆளும்தரப்பு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுச் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்

☞2

# சம்பள உயர்வைக் கேட்டு தொழிற்சங்க நடவடிக்கை

## அனைத்துத் துறைகளையும் இணைத்து நடத்த முயற்சி

சம்பள உயர்வு தொடர்பில் ஏமாற் றப்பட்டுள்ள அரச அலுவலர்களுக்காக அனைத்துத் தொழிற்சங்களையும் ஒருங்கிணைத்துப் போராட்டங்களில் ஈடுபடுவதற்கான முயற்சிகள் தொடங்கியுள்ளன.

"சம்பள முரண்பாடு தொடர்பில் அதிபர் ஆசிரியர் சங்கம் மாத்திரமல்ல ஏனைய தொழிற்சங்கங்களுடனும் கலந்துரையாடி முழுமையான தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்க தயாராக

☞2

# ரணிலின் வருத்தம்

மன்னாரில்அதானிநிறுவனத்தின்புதுப்பிக்கத்தக்க எரிசக்திதிட்டத்தை இந்த ஆளும்தரப்பு முன்னெடுத்துச் செல்லத் தவறியதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வருத்தம் தெரிவித்துள்ளார்.

இந்திய முதலீட்டாளர்கள் உட்பட தொடர்புடைய பங்குதாரர்களும் இலங்கை ஆளும்தரப்பும் ஏற்கனவே ஒப்புக்கொண்ட ஒரு திட்டம் குறித்து மீண்டும் பேச்சு நடத்த திசைகாட்டி அளும்தரப்பு முயற்சித்ததன் பின்னணியில் உள்ள நியாயம் குறித்து முன்னாள் ஜனாதிபதி கேள்வி எழுப்பினார்.

இந்தநிலைமைஎதிர்காலத்தில்பெரியஅளவிலான முதலீட்டுத் திட்டங்களுக்குத் தடையாக

☞2

# முதல் விந்தணு வங்கி இலங்கையில் திறப்பு

இலங்கையில் ஒரு மருத்துவமனையில் நிறுவப்பட்ட முதல் விந்தணு வங்கி கொழும்பு கேசல் மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ளதாக மருத்துவமனையின் இயக்குநர் மருத்துவர் அஜித் தண்டநாராயணா தெரிவித்தார்

செயற்கைக் கருத்தரிப்பு -மூலம் குழந்தைகளைப் பெறுவதற்குத் தேவையான விந்தணுக்களைப் பெறும் திறன் இந்த விந்து வங்கிக்கு இருப்பதாகவும், மிகவும்ரகசியமாகவும் தனியுரிமையைப்பாதுகாக்கும்வகையிலும்

☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

டுள்ள சிக்கலைச் சமாளிக்கக் கட்சிகள் தேர்ந்தெடுத்துள்ளவிளக்கங்கள்வேடிக்கையாக இருக்கின்றன.

வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் இதுதான் நிலை. பண்டாரகம உள்ளூராட்சி மன்றத்திற்காக, 36பேரின்பெயர்ப்பட்டியலுடன் வழங்கப்பட்ட வேட்புமனுவின் கடைசிப் பக்கம் காணாமல் போய்விட்டதாக இப்போது ஒரு குற்றச்சாட்டு எழுந்துள்ளது. பிரச்சினை அந்தப் பக்கம் காணாமற்போனதில் இல்லை. களுத்துறை மாவட்ட தேர்தல் செயலகத்தின் தேர்தல் அதிகாரியிடம் வேட்புமனு ஒப்படைக்கப்பட்ட பின்னரே அது காணாமல் போனதாகக் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளமைதான் பிரச்சினை.

அதிகாரிகள் அந்த வேட்புமனுவை நிராகரித்துவிட்டார்கள். அது ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்புமனு. கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் கையொப்பம், உத்தியோகபூர்வ முத்திரை ஆகியன வைக்கப்பட்டிருந்த பக்கமே காணாமல் போயிருக்கின்றதாம். கட்சி செயலரின் கையெழுத்து அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டவரின் கையெழுத்து இல்லாமல் வேட்புமனு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படாது. ஆனால், தாங்கள் வேட்புமனுவைக் கையளித்தபோது அந்தப் பக்கம் இருந்தது என்றும் பின்னர்தான் காணாமல் போய்விட்டது என்றும் அந்தக் கட்சியின் அமைப்பாளர் ஒருவர் அடம்பிடிக்கிறார்.

அவரது கருத்துப்படி, அந்த வேட்புமனுவை நிராகரிப்பதற்காகவே அலுவலர்கள் அந்தப் பக்கத்தைக் கிழித்துவிட்டார்கள் என்று அர்த்தமாகின்றது. தங்கள் தரப்பில் கட்சித் தலைவர், செயலாளர் சரி பார்த்து, பின்னர் மாவட்டக் கிளைச் செயலாளர் சரிபார்த்து, கட்சியின் வழக்கறிஞர்கள் மூவர் அடங்கிய குழு சரிபார்த்த பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுவில் எல்லாப் பக்கங்களும் இருந்தன, அலுவலர்களிடம் கொடுத்த பின்னர்தான் அது காணாமற்போய்விட்டது என்று ஒற்றைக் காலில் நிற்கிறார் அந்த அமைப்பாளர்.

இது குறித்து களுத்துறை மாவட்டச் செயலாளரும் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான ஜனக குணவர்தனவோ, ''எங்கள் அலுவலர்கள் ஒரு பக்கத்தை மறைக்க வேண்டிய அவசியமில்லை. அதை எப்படி முறையாகக் கொடுப்பது என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். நீங்கள் கொடுத்த விண்ணப்பத்தின் பிரதிகளை விரும்பும் அளவுக்கு வைத்திருக்கலாம். எங்களுக்கு அந்தப் பக்கம் வழங்கப்பட்டன என்பதற்கு ஏதேனும் ஆதாரம் உள்ளதா? கடைசி நேரத்தில் 110 வேட்புமனுக்கள் ஒப்படைக்கப்பட்டன. ஏனையவை சரியாக இருக்கும்போது இவர்களின் மனுவில் மட்டும் எப்படி ஒரு பக்கம் காணாமற்போகும். அலுவலர்களிடம் கொடுத்த பின்னர் காகிதம் தொலைந்து போயிருந்தால் நீதிமன்றத்தில் அதனை நிரூபிக்கச் சொல்லுங்கள்'' என்று சீறுகின்றார்.

நல்லவேளை எங்களுடைய அரசியல்வாதிகளில் எவருக்கும் இந்த 'ஐடியா' வரவில்லை. ஏற்கனவே அந்தக் கட்சிக்காரரின் வேட்பாளரை நிராகரித்துவிட்டு வேட்புமனுவை ஏற்றுக்கொண்டார்கள், ஆனால் எங்களுக்கு மட்டும் ஒரு வேட்பாளரை நிராகரித்தமைக்காக வேட்புமனுவையே நிராகரித்து விட்டார்கள் என்று குழந்தைத்தனமாகக் குற்றஞ்சாட்டியவர்கள், இது போன்று இன்னும் அள்ளி விட்டிருப்பார்கள். எதற்கும் அ-டுத்தடுத்த தேர்தல்களில் அத்தகைய பதில்களை எதிர்பார்க்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வேலையற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் முறையான கொள்கை ரீதியிலான திட்டமிடல்கள் இருக்கவில்லை. ஆகையால் இத்தகைய இக்கட்டான சூழல் உருவாகியுள்ளது.

இலங்கையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது என்றும் அதற்கான தீர்வினை வழங்குமாறும் ஆசிரியர் சங்கங்கள் தெரிவித்து வருகின்றன. சுமார் 35 ஆயிரம் ஆசிரியர்களுக்கு வெற்றிடம் காணப்படுகின்றன.

அப்படியிருந்தும் அதே எண்ணிக்கையளவிலான வேலையற்ற பட்டதாரிகள் வீதியில் நிற்கின்றனர். வைத்தியசாலைகளிலும் நோயாளர்கள் மருந்து மற்றும் ஏனைய சேவைகளை பெற நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது. சுகாதார சேவையிலும் பல துறைகளில் ஊழியர்களுக்கான பற்றாக்குறை உள்ளது. அவ்வாறான சேவைகளுக்கு வேலையற்ற பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்யலாம். எனினும் இந்த ஆளும்தரப்பு இவை தொடர்பில் கருத்திற் கொண்டதாகத் தெரியவில்லை.

தேசிய மக்கள் சக்தியின் 'வளமான நாடு அழகான வாழ்க்கை' என்ற தேசிய வேலைத்திட்டத்திலும் துரிதமாக ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் வேலையற்ற பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆசிரியர் சேவை, தகவல் தொழிநுட்ப சேவை, அரச சுங்க பிரிவு, வெளிநாட்டு மற்றும் சுற்றுலா சேவை உள்ளிட்ட அரச சேவைகளுக்காக 30 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளப்படுவர் என்று தேர்தலுக்கு முன்னர் ஆளும்தரப்பு உறுதியளித்திருந்தது. ஆனால் நிறைவேற்றவில்லை.

இந்த ஆளும்தரப்புத் தமது வாக்குகளுக்காக மாத்திரமே பட்டதாரிகளைப் பயன்படுத்திக்கொண்டுள்ளது. பொய்யான வாக்குறுதிகளை அளித்த அவர்கள், தற்போது வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை தர முடியாதெனத் தெரிவிக்கின்றனர். இதை ஏற்கமுடியாது. வாக்குறுதியளித்தபடி வேலையற்ற பட்டதாரிகளுக்கு உடனடியாக வேலை வாய்ப்பை வழங்க வேண்டும் - என்றார்.

## விடுதலைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அல் - ஜசீரா செய்திச் சேவை தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக, இலங்கை இராணுவம் உள்ளிட்ட பாதுகாப்புபடைகளைக் குற்றவாளிகளாகச் சர்வதேசத்துக்கு காண்பிப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இலக்கு வைத்தது. அவ்வாறான அல்ஜசீராவின் நிகழ்ச்சி நிரலுக்கமையவே இந்த ஆளும்தரப்புச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

30 ஆண்டுகளாகியும் கவனத்தில் கொள்ளாமலிருந்து பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை கண்களில் கண்ணீர் மல்க ஆளும்தரப்பு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. அதனைக் கேட்டு சபாநாயகரும் கண்ணீர் வடிக்கின்றார்.

தமது தலைவர் ரோஹண விஜேவீரவை கொலை செய்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று ஜே.வி.பி. கூறவில்லை. ஆனால், காலத்துக்குத் தேவையற்ற, எதிர்காலத்துக்கு அச்சுறுத்தலாக அமையக் கூடியவற்றையே தற்போதைய ஆளும்தரப்புச் செய்துவருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு சாதகமாகச் செயற்பட்டு, நாட்டின் இராணுவத்தினரையும், போரில் உயிர்த் தியாகம் செய்த பாதுகாப்புப் படையினரையும் சர்வதேசத்தின் மத்தியில் காட்டிக் கொடுப்பதற்கான செயற்பாடுகளே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

1971ஆம் ஆண்டு நாடு முழுவதும் இருந்த பொலிஸ் நிலையங்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு உள்நாட்டுப் போர் ஒன்றுக்கு வழியமைத்தது ஜே.வி.பியே. ரோஹண விஜேவீர தலைமையிலான ஜே.வி.பி. ஜனநாயக ரீதியில் அன்றி அராஜகமாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு நாட்டில் வன்முறைகளைத் தூண்டியது. அவ்வாறானவர்கள்தான் இன்று பட்டலந்த அறிக்கைக்காக முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர் - என்றார்.

## 3 உள்ளாட்சி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுக்கள் இந்தச் சபைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை வரை கட்டுப்பணம் செலுத்த முடியும்.

## வேட்புமனு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தில் குறிப்பாக விவாதிக்கப்பட்டது. நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் மற்றும் அவற்றின் பின்னணியில் உள்ள காரணங்கள் குறித்து அரசியல் கட்சி பிரதிநிதிகள் விரிவான தகவல்களை வழங்கினர் எனவும் அறியப்படுகிறது.

சமீபத்திய நாட்களில், பல அரசியல் கட்சிகளின் 400 வேட்புமனுக்கள் பல்வேறு காரணங்களுக்காக தேர்தல் அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டுள்ளன. உள்ளாட்சித் தேர்தல் மே 6 ஆம் தேதி நடைபெற உள்ளது.

## ஆளும் தரப்பினது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்களுக்கு முன்னர்கூட கொழும்பில் காணி உரிமையாளர்களை அமைச்சர் சந்தித்து, இது உங்களுடைய காணிகளாயினி விடுவிப்போம் என்று ஒருபுறத்தில் கூறிக்கொண்டு, மறுபுறத்தில் அதே அரச இயந்திரம் சட்டவிரோத விகாரை வளாகத்துக்குள் அமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழாவுக்கு அரச வளங்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. இது அநுர அரசின் இரட்டை முகத்தையே காட்டுகின்றது.

அநுர ஒருபுறத்திலே தான் இனவாதம், மதவாதத்துக்கு இடமளிக்கமாட்டேன் எனச் சொல்லிக்கொண்டு, தமிழர் தேசத்தில் மேலும் மேலும் பௌத்த விரிவாக்கல் நடவடிக்கைகளை முன்னெடுக்கிறார். அவரின் தலைமையில்தான் தையிட்டி விகாரையின் விரிவாக்கம் முன்னெடுக்கப்படுகின்றது. எங்கள் மக்கள் இதனைப் புரிந்துகொள்ளவேண்டும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில், நாடாளுமன்றத் தேர்தலில் அற்ப சலுகைகளுக்காக இந்த இனவாத அரசுக்கு ஆதரவு வழங்கிய தமிழ் புத்தி ஜீவிகளும் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள். இதன் விளைவுகள் எதிர்காலத்தில் எவ்வாறு வந்து முடியும் என்பதைக் காலம்தான் சொல்லவேண்டும்.

இந்தத் திறப்பு விழா நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும் என்பது போராட்டக்காரர்களின் - காணி உரிமையாளர்களின் கோரிக்கை. இது எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாத ஏற்றுக்கொள்ள முடியாத - ஆக்கிரமிப்பு நடவடிக்கை - என்றார்.

## சம்பள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றோம் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் நேற்றுத் தெரிவித்தார்.

அவர் சம்பள முரண்பாடு தொடர்பில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியபோது தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி இதுவரை அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை. வரவு செலவுதிட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னரும் அவர் எவ்வித கருத்துகளையும் முன்வைக்கவில்லை.

ஆகையால் ஒட்டுமொத்த ஆசிரியர் துறையும் ஆளும்தரப்பின் நிலைப்பாடு தொடர்பில் அதிருப்தி அடைந்துள்ளது. கடந்த ஆட்சிக் காலத்திலும் எமது சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வினை வழங்குமாறு வலியுறுத்தித் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தோம்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் புதிய ஆளும்தரப்பும் எமது பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து உதவியை பெற்றுக் கொண்டதன் பின்னர் பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கான சம்பளம் உள்ளிட்ட கொடுப்பனவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நாம் அதற்கு எதிராக எவ்வித கருத்துகளையும் முன்வைக்கப்போவதில்லை. எனினும் அதிபர் ஆசிரியர் குறித்துக் கவனத்தில் கொண்டிருக்கலாம் என்பதே எமது கோரிக்கை.

ஆசிரியர்களுக்கான பதவி உயர்வு, அடிப்படை சம்பளம் உள்ளிட்ட பல பிரச்சினைகள் தொடர்பில் எமது சங்கம் ஆளும்தரப்புக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

அவை தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்காது வரவு - செலவு திட்டத்துக்கு நாடாளுமன்ற அங்கீகாரத்தை பெற்றுள்ளனர். எமது சங்கத்தில் இருந்த ஆசிரியர்களும் நாடாளுமன்றத்தில் உள்ளனர். எனினும் அவர்கள் இது குறித்து எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை.

பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், அதிபர் ஆசிரியர் சங்கம் மாத்திரம் அல்ல ஏனைய தொழிற்சங்கங்களுடனும் கலந்துரையாடி கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்க தயாராக உள்ளோம் என்றார்.

## ரணிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும் என்று ரணில் விக்கிரமசிங்கே தனது கவலையை வெளிப்படுத்தினார்.

தனது ஆளும்தரப்பால் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லுமாறு வலியுறுத்துகின்றார் என்றும் முன்னாள் ஜனாதிபதி கூறினார். மின்னணு தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் பங்கேற்று உரையாற்றும்போதே ரணில் விக்கிரமசிங்க இதனைக் கூறினார்.

இந்தியப் பெருங்கடலை மையமாகக் கொண்டு ஆசியாவை நோக்கிய உலகளாவிய சக்தி மாற்றம் நடைபெற்று வருவதாகச் சுட்டிக்காட்டிய முன்னாள் ஜனாதிபதி, இலங்கை அதிலிருந்து பயனடைய வேண்டும் என்றார்.

## ஜிஎஸ்பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

ஆடை மற்றும் இறப்பர் உற்பத்திகள் இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவ்வாறு சுமார் 3.5 பில்லியன் டொலருக்கான ஏற்றுமதிகள் இடம்பெறுகின்றன. ஆனால் அங்கிருந்து 600 மில்லியன் டொலர் அளவிலேயே இறக்குமதிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதனால் எமக்குப் பெரும் இலாபம் காணப்படுகிறது.

இவ்வாறான ஏற்றத்தாழ்வுகளைக்கொண்ட வர்த்தக நாடுகள் தொடர்பிலேயே அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் புதிய வரி கொள்கைகளை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளார்.

அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. மறுபுறம் இந்த நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

2015 நல்லாட்சி ஆளும்தரப்பில் 7 சதவீதமாகக் காணப்பட்ட தேசிய உற்பத்தி வருமானத்தை நாம் 15 சதவீதம் வரை அதிகரித்தோம். அந்த திட்டத்தை தற்போதைய ஆளும்தரப்பு முன்கொண்டு செல்வது உண்மையில் மகிழ்ச்சிக்குரியது. அதேநேரம் கடன் மீள் செலுத்தல் மற்றும் ஏற்றுமதி தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தப்படவேண்டும். வெளிநாட்டு முதலீடுகளையும் ஈர்க்க வேண்டும். இவ்வாறு பொருளாதாரத்தை சரியான பாதையில் கொண்டுசெல்வதற்கான தலைமைத்துவத்தை எவ்வாறு உருவாக்குவது என்பது தொடர்பில் ஆளும்தரப்பு அவதானம் செலுத்தவேண்டும்.

பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை நீக்குவதை விடுத்து அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புச் சலுகைகளை நீக்குவதே பொருத்தமானது.

எமது ஆட்சியில் மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகை மீண்டும் பெற்றுக் கொள்ளப்பட்டது. அதில் மீண்டும் எவ்வித சிக்கல்களும் ஏற்படக் கூடாது எனில், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது. அதேவேளை இது தொடர்பில் ஏற்கனவே எட்டப்பட்ட இணக்கப்பாடுகளை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதை ஆளும்தரப்பு தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

அமெரிக்காவுக்கு அடுத்ததாக ஐரோப்பிய நாடுகளுக்கே இலங்கையிலிருந்து அதிகளவில் ஏற்றுமதிகள் இடம்பெறுகின்றன. எனவே இது தொடர்பில் வெற்றி கொண்ட சிறந்த சந்தர்ப்பத்தை எக்காரணத்துக்காகவும் இழந்து விடக்கூடாது. அதனைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்றார்.

## தேர்தல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்டதாகவும், மாத்தறை கந்தர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கபுகம பகுதியில் நபர் ஒருவரை தாக்கி காயப்படுத்தியதாகவும் தேர்தல் வன்முறையோடு கூடிய முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

களுத்துறை பிரதேச சபை பேருவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெட்டிமுல்ல மற்றும் மல்பொக்க வீதிகளை மீளமைக்கும் நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் முறைப்பாடு கிடைத்துள்ளது. இது குறித்து நடத்தப்பட்ட விசாரணையின் போது, வீதி மீளமைக்கும் பணிகள்

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியாவில் தங்கியுள்ள ஈழ தமிழ் அகதிகள் நாடு திரும்பவேண்டும் என்பதே எதிர்பார்ப்பு

## வட மாகாண ஆளுநர் தெரிவிப்பு

இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகள் இலங்கைக்கு திரும்பவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. அவ்வாறு நாடு திரும்புவர்களுக்கான உதவிகளை வழங்குவதுடன், ஈழ அகதிகள் நாடு திரும்புவது தொடர்பில் இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்கள் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை உருவாக்குவதற்கும் உரிய தரப்புக்களிடம் கோரிக்கை முன்வைக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.





இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகளை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவருவது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அழைத்துவரவேண்டும் என போர் முடிந்ததிலிருந்து சொல்லப்பட்டு வருகின்றது என்பதையும், அவர்கள் மீண்டும் இங்குவரவேண்டும் என்பதே இங்குள்ள எல்லோரது விருப்பம் என்பதையும் ஆளுநர் குறிப்பிட்டார்.

அத்துடன் கடந்த காலங்களில் இவ்வாறு இந்தியாவிலிருந்துவந்த ஒவ்வொருவர் தொடர்பான விவரங்களையும் பெற்று அவர்களுக்கு எத்தகைய தேவைப்பாடுகள் இன்னமும் இருக்கின்றன என்பதை அறிந்து அதனை உடனடியாக பூர்த்திசெய்யவேண்டும் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

அதன் போது, ஒபர் சிலோன் நிறுவனத்தின் திட்டத் தலைவர் செல்வி சின்னதம்பி சூரியகுமாரி, தமது நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும், எதிர்பார்ப்புத் தொடர்பிலும் விவரித்தார்.

இலங்கையிலிருந்து 4 கட்டங்களாக இந்தியாவுக்கு 334,797 பேர் அகதிகளாகச் சென்றுள்ளனர் என்றும் தற்போது தமிழகத்தில் 103 முகாம்களில் 58,104 பேர் இருக்கின்றனர் என்ற தரவுகளையும் ஒபர் சிலோன் நிறுவனத்தினர் தெரியப்படுத்தினர்.

தற்போது தமிழகத்தில் முகாம்களிலுள்ள 58,104 பேரில், 50,620 பேர் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் குறிப்பிட்டனர். 2009ஆம் ஆண்டிலிருந்து இதுவரை வடக்கு மாகாணத்துக்கு 14,531பேர் வருகைதந்துள்ளனர் என்றும் ஆளுநருக்கு சுட்டிக்காட்டினர்.

தமிழகத்தில் தங்கியுள்ளவர்கள் நாடு திரும்புவதற்கு நிலையான கட்டமைப்பு பொறிமுறை உருவாக்கப்படவேண்டும் என்றும், இலங்கை, இந்திய அரசாங்கள் இடையேபுரிந்துணர்வுஉடன்படிக்கை தேவைஎன்றும், இலங்கையில் அரசியல் உறுதிப்பாடு அவசியம் எனவும் ஒபர் சிலோன் நிறுவனத்தினர் குறிப்பிட்டனர்.

மேலும் தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளுக்கு இலங்கை மற்றும் வடக்கு மாகாணம் தொடர்பானமிகைப்படுத்தப்பட்ட அல்லது போலியான தகவல்கள் வழங்கப்படுகின்றமையும் அவர்கள் நாடு திரும்புவதற்கு சவாலாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் நாடு திரும்பிய ஈழ அகதிகள் இலங்கைக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதில் சவால்களை எதிர்கொள்கின்றனர் என்றும், இலங்கைக்கு நாடு திரும்புவர்கள் இங்கிருந்து சென்றவர்களின் இரண்டாம் அல்லது மூன்றாம் தலைமுறையினர் என்பதால், இலங்கையில் அவர்களது பூர்வீக பிரதேசத்தை அடையாளம் காண்பதிலும், அவர்களின் காணிகளைக் கண்டறிவதிலும் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர் என்ற விடயமும் ஆளுநரின் கவனத்துக்கு ஒபர் சிலோன் நிறுவனத்தால் கொண்டு வரப்பட்டது.

கொள்கை ரீதியான ஆவணம் ஒன்றை ஒபர் சிலோன் நிறுவனம் தயாரித்து வழங்கிய பின்னர் அதனை அடிப்படையாக வைத்து இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதாக ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார்.

நாடு திரும்ப விருப்பமானவர்களின் பட்டியலை ஒபர் சிலோன் நிறுவனம், வடக்கின் 5 மாவட்டச் செயலர்களுக்கு வழங்கிய பின்னர் அவர்களுக்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மாவட்டச் செயலர்கள் மேற்கொள்வார்கள் என ஆளுநர் குறிப்பிட்டார்.

அதேவேளை, தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளில் பலர் தாதியர் கற்கைநெறியை முடித்தவர்கள் எனவும், விளையாட்டுத்துறையில் சாதித்தவர்கள் எனவும் சுட்டிக்காட்டிய ஒபர் சிலோன் நிறுவனத்தினர், வடக்கு மாகாணத்தின் சொத்தான அவர்களை இழக்கக் கூடாது எனவும் கோரிக்கை முன்வைத்தனர்.

தமிழகத்திலிருப்பவர்களை வலுக்கட்டாயமாக நாட்டுக்கு அழைத்துவரமுடியாது எனக் குறிப்பிட்ட ஆளுநர், வரவுள்ளவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கத் திட்டமிடுமாறும் அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் ஒபர் சிலோன் நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர்கள், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், மேலதிக மாவட்டச் செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள், சமுர்த்திப் பணிப்பாளர்கள், மாவட்டப் பதிவாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

# உழவு இயந்திர கலப்பையில் சிக்கி உயிரிழந்த இளைஞன்

(பாறுக் ஷிஹான்)

வயலில் உழுதுகொண்டிருந்த உழவு இயந்திரத்தில் இருந்து தவறி விழுந்து சுழல் கலப்பையில் சிக்கி இளைஞன் உயிரிழந்துள்ள சம்பவம் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அகத்திக்குளம் பிரதேச வயலில் இடம்பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை மேற்படி பகுதியில் உழுதுகொண்டிருந்த உழவு இயந்திரத்தில் இருந்து தவறி 16 வயது இளைஞன் கலப்பையில் சிக்குண்டு பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்த இளைஞன் கண்ணகி கிராமத்தை சேர்ந்த 16 வயது மதிக்கத்தக்க பெ.ஜீரோசன் என அடையாளம் காணப்பட்டார்.

குறித்த இளைஞன் குடும்பத்தில் மூத்த பிள்ளை என்பதுடன் இரு சகோதரிகளுடன் வாழ்ந்து வருவதுடன் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக பாடசாலையில் இருந்து இடைவிலகி பல்வேறு தொழில் புரிந்து வந்துள்ளார்.

இந்நிலையில் உழவு இயந்திர சாரதியாக வேண்டும் எனும் ஆசையில் நெருங்கிய நண்ரொருவருடன் உழவு இயந்திரத்தில் பயிற்சி எடுத்து வந்த நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

அத்துடன் உழவு இயந்திரத்தின் சாரதியான உயிரிழந்தவரின் நண்பன் அக்கரைப்பற்று பொலிஸாரிடம் சரணடைந்துள்ள நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# மதுரங்குளி முக்குத்தொடுவா வீதிக்கான தற்காலிக மாற்று பாதை திறந்து வைப்பு

(சியாஜ்)

புத்தளம் மதுரங்குளி முக்குத்தொடுவா வீதியில் உள்ள டச்சுப் பாலத்தின் புனரமைப்புக்காக மூடப்பட்ட வீதிக்கான மாற்றுப் பாதை சனிக்கிழமை மதுரங்குளி வர்த்தக சங்கத் தலைவர் எம்.எஸ்.டி அமானினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.



மேற்படி திறப்பு விழாவில் கடையாமோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி அதிபர் எம்.எச்.எம் தௌபீக், மதுரங்குளி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, மதத்தலைவர்கள், மதுரங்குளி வர்த்தக சங்க உறுப்பினர்கள், வர்த்தகர்கள், ஊர்மக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஊழல் சங்கிலிகளை உடைத்தல்

இலங்கையில் ஊழல் மற்றும் லஞ்சம் நீண்ட காலமாக அரிக்கும் சக்திகளாக இருந்து வருகிறது, பொதுமக்களின் நம்பிக்கையிழப்பிற்குக் காரணமாக இருக்கின்றது. அரச நிறுவனங்களை அரிக்கிறது. பொருளாதார முன்னேற்றத்தைத் தடுக்கிறது. தற்போதைய ஆட்சி உட்பட அடுத்தடுத்த ஆளும்தரப்புக்கள் பலமுறை வாக்குறுதிகள் அளித்த போதிலும், உண்மையான முன்னேற்றம் இன்னும் மழுப்பலாகவே உள்ளது. நாடு பொருளாதார சவால்களை எதிர்கொள்கையில், ஊழலை நிவர்த்தி செய்ய வேண்டிய அவசியம் இதற்கு முன்பு இருந்ததைவிட அதிகமாக இருந்தது.

அரச தலைவர் தேர்தல் மேடைகளில் அநுரகுமார திசநாயக்க ஊழல் தொடர்பில் தன்னிடம் சகிப்புத்தன்மையே இருக்காது என்று உறுதியளித்தார். அவரது பரப்புரை வாக்குறுதிகள் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் ஊழல் நடைமுறைகள் மீதான வலுவான ஒடுக்குமுறை ஆகியவற்றை வலியுறுத்தின. இருப்பினும், அவரது பதவிக் காலத்தின் 6 மாதங்களில், யதார்த்தம் அவரது வாக்குறுதிகளில் இருந்து வேறுபடுவதாகத் தெரிகிறது. ஊழல்வாதிகளை வெளிக்கொண்டுவர அரசுத் தலைவர் ஆணைக்குழு ஒன்றை நிறுவ வேண்டும் என்று அவரது கட்சியைச் சேர்ந்தவர்களே நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பவேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது. அரசுத் தலைவரின் ஊழலை வேரறுப்பதை நோக்கமாகக் கொண்ட கொள்கைகளை செயல்படுத்துவது பெரும்பாலும் சீரற்றதாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் இருப்பதற்கு இதுவே சிறந்த உதாரணம்.

இலஞ்சம், ஊழலைச் சுத்தம் செய்வதாக வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்த ஆளும் கட்சி, அதன் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. ஆரம்ப உற்சாகம் மற்றும் நிதி முறைகேடுகளை விசாரிக்க குழுக்களை நிறுவியபோதிலும் உருப்படியான நடவடிக்கைகள் எவையும் இல்லை என்பது வெளிப்படை. முன்னாள் ஊழல் குற்றவாளிகளைச் சிறையில் அடைப்போம், வெளிநாடுகளில் கொண்டு சென்று பதுக்கப்பட்ட இலங்கைப் பணத்தை மீட்டு வருவோம் என்றெல்லாம் குரல் எழுப்பியவர்களின் முழக்கங்களை இப்போது ஈனசுரத்தில்கூடக் கேட்கமுடியவில்லை. அதேநேரத்தில் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்ந்து வெளிவருகின்றன, பெரும்பாலும் நிர்வாகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்ட நபர்களையே அவை குற்றம் சாட்டுகின்றன, இது ஆளும்தரப்பு ஊழலை ஒழிப்பதில் கொண்டுள்ள உறுதிப்பாடு மீது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையம் வழக்குகளைத் தொடர்வதில் தீவிரமாக செயல்பட்டு வருகிறது, ஆனால் அதன் சுதந்திரம் பெரும்பாலும் கேள்விக்குறியாகிறது. வழக்குத் தொடர ஆணையத்தின் முயற்சிகள் சட்டத்தடைகள், போதுமான சுயாட்சி மற்றும் வளங்கள் இல்லாமல், அதன் ஆற்றல் இன்னும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அது ஊழல் பெருச்சாளிகளை விட்டுவிட்டு ஆங்காங்கே கிடக்கும் நெத்தலி மீன்களையே பொறுக்கி வருகின்றது. இந்த ஆணைக்குழு இப்படி இயங்குவதாகத்தான் ஆட்சிக்குவர முன்னர் ஆளும்தரப்பினரும் அரசுத் தலைவரும் குற்றஞ்சாட்டி வந்தனர். அதற்கு அரசியல் தலையீடுகளே காரணம் என்றனர். ஆனால் ஆட்சி மாறிய பின்னரும் ஆணையகத்தின் செயற்பாடுகள் மாறவில்லை. அதற்கு இப்போது யார் பொறுப்புக்கூறுவது?

சமீபத்திய நாடாளுமன்ற உரையில், நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெட்டி தற்போதைய நிர்வாகம் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதை கடுமையாக விமர்சித்தார். உயர் மட்ட ஊழலின் நிகழ்வுகளை மேற்கோள் காட்டி, ஹந்துனெட்டி உறுதியான சட்டமன்ற சீர்திருத்தங்கள் மற்றும் லஞ்சத்தை எதிர்த்துப் போராடுவதற்கு உண்மையிலேயே சுயாதீனமான ஆணையம் அமைக்கப்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். அவரது உணர்ச்சிமிக்க உரை, நேர்மை மற்றும் நீதிக்கான தேவை குறித்த பொது விவாதத்தை மீண்டும் தூண்டியுள்ளது.

ஊழலை உண்மையிலேயே எதிர்த்துப் போராட, இலங்கைக்கு ஒரு விரிவான மற்றும் நீடித்த அணுகுமுறை தேவை. மேற்பார்வை அமைப்புகளின் சுதந்திரத்தை வலுப்படுத்துதல், கடுமையான தண்டனைகளை அமல்படுத்துதல் மற்றும் தலைவர்களை பொறுப்புக்கூற வைக்க மக்களுக்கு அதிகாரம் அளித்தல் ஆகியவை இதில் அடங்கும். அரசியல் விருப்பம் தேர்ந்தெடுக்கப்பட்ட அமலாக்கத்துடன் அல்ல, தீர்க்கமான நடவடிக்கையுடன் பொருந்த வேண்டும்.




# ஊடக சுதந்திரமும் டிரம்ப் அரசும்

## அமெரிக்காவின் குரலை (VOA) மூட உத்தரவு:

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

உலகெங்கும் அமெரிக்காவின் நலன்களை பாதுகாக்கும் ஊதுகுழலான வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா (Voice of America) செய்தி நிறுவனத்தை மூட ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் உத்தரவு பிறப்பித்துள்ளார். அமெரிக்க அரசின் நிதியுதவி பெற்ற செய்தி நிறுவனமான வாய்ஸ் ஆஃப் அமெரிக்காவை டிரம்புக்கு எதிரானது மற்றும் தீவிரமானது என்று குற்றம் சாட்டி, அதை முடக்குவதற்கான உத்தரவில்




கையெழுத்திட்டுள்ளார்.

உலகின் அனைத்து பாகங்களிலும் தொடர்பூடக சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள் அதிகரித்து வருவதாக சுயாதீன (Freedom House) கண்காணிப்புக் குழுவின் கணிப்பீடு அண்மையில் தெரிவித்துள்ளது.

கடந்த பல வருடங்களாக தொடர்பூடக சுதந்திரம் பெருமளவில் வீழ்ச்சியடைந்து வருவதாக வாஷிங்டனை தளமாகக் கொண்டு செயற்படும் இந்த அமைப்பு கூறியுள்ளது.

ஒரு காலத்தில் தங்கள் பிரச்சார நலனுக்காக பயன்படுத்திய ஊடகங்களை இப்போது அந்த நாட்டின் அரசே முடக்குவது என்பது இந்த ஊடகங்களின் நம்பகத் தன்மையை இலகுவாக அறிந்து கொள்ளலாம்.

### வலதுசாரி ஊடக ஆதிக்கம் :

அமெரிக்காவில் வரி செலுத்துவோர் இனி




தீவிர பிரச்சாரத்திற்கு அடிமையாகாமல் இருப்பதை உறுதி செய்யும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது . அமெரிக்காவில் அரசியல்வாதிகள் , முக்கிய தலைவர்களை விமர்சிக்கும் ஊடகங்களின் நிலை தற்போது மிகவும் மோசமாகி உள்ளது

சர்வதேச அரங்கில் அமெரிக்காவின் முதன்மையன ஊடக சேவையாக இருக்கும் வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா - ரநுபு, இரண்டாம் உலகப் போரின் போது ஜேர்மனிய நாஜி பிரச்சாரத்தை எதிர்க்க உருவாக்கப்பட்டது.

இந்த ஊடக நிகழ்ச்சிகள் மூலமாக தற்போது உலகளவில் ஒவ்வொரு வாரமும் கோடிக்கணக்கான மக்களைச் சென்றடைகிறது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரநுபுவின் ஊடக இயக்குனர் மைக் அப்ரமோவிட்ஸ், தனது நிறுவனத்தின் 1,300 பேர் கொண்ட அவரது முழு ஊழியர்களும் ஊதியத்துடன் கூடிய விடுப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

இன்று அமெரிக்காவுடன் பகைமையை கொண்டுள்ள ஈரான், சீனா மற்றும் ரஷ்யா போன்றவை அமெரிக்காவை இழிவுபடுத்துவதற்காக தவறான கதைகளை உருவாக்குவதில் பில்லியன் கணக்கான டாலர்களை செலவழித்து வருகின்றன என்று அப்ரமோவிட்ஸ் குறிப்பிட்டுள்ளார். இந்த மூடும் உத்தரவு VOAவை அதன் முக்கியமான பணியைச் செய்ய முடியாமல் செய்துள்ளது என்று கூறப்படுகிறது.

இந்த புதிய உத்தரவால் சுதந்திரமான பத்திரிகைக்கான அமெரிக்காவின் நீண்டகால உறுதிப்பாட்டைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என்று அமெரிக்க தேசிய பத்திரிகையாளர் மன்றம் தெரிவித்துள்ளது.

மேலும் இந்த விவகாரம் ஒரு முழு செய்தி அறையையும் ஒரே இரவில் ஓரங்கட்ட முடிந்தால், அது பத்திரிகை சுதந்திரத்தின் நிலையைப் பற்றி என்ன ஆகும் என்று தெரியவில்லை. இந்த மூடு விழா VOA இல் சுயாதீன ஊடகத்தின் எதிர்காலத்தை ஆபத்தில் ஆழ்த்தும் ஒரு அடிப்படை மாற்றமாகும் என்று இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

### கம்யூனிச எதிர்ப்பு ஊடகங்கள்:

ஜனாதிபதி டிரம்பின் மூடும் உத்தரவு VOA இன் தாய் நிறுவனமான US Agency for Global Media (USAGM) அமைப்பையும் குறிவைத்துள்ளது. இந்த ஊடகங்கள் முதலில் கம்யூனிசத்தை எதிர்க்க அமைக்கப்பட்ட Radio Free Europe மற்றும் Radio Free Asia போன்ற இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கும் நிதியளித்தது.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# ஊடக...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

VOA மற்றும் USAGM இன் கீழ் உள்ள பிற ஊடக நிலையங்கள் 400 மில்லியனுக்கும் அதிகமான கேட்போருக்கு சேவை செய்வதாகக் கூறுகின்றன. அவை பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நிதியளிக்கப்படும் பிபிசி உலக சேவைக்கு பரந்த அளவில் சமமானவையாக இருக்கின்றன.

இந்த நேரத்தில் செக் குடியரசின் வெளியுறவு அமைச்சர் ஜான் லிபாவ்ஸ்கி, ஐரோப்பிய ஒன்றியம் பிராகாவில் ரேடியோ ஃப்ரீ ஐரோப்பா/ரேடியோ லிபர்ட்டி இயங்க உதவ முடியும் என்று நம்புவதாகக் கூறினார்.

அத்துடன் ஒளிபரப்பாளரின் செயல்பாடுகளை குறைந்தபட்சம் ஓரளவுக்கு பராமரிப்பதற்கான வழிகளைக் கண்டறிய திங்களன்று நடைபெறும் கூட்டத்தில் ஐரோப்பிய வெளியுறவு அமைச்சர்களிடம் கேட்பதாக அவர் கூறியுள்ளார்.

## எலோன் மஸ்க் X ஊடக ஆதிக்கம் :

அதிபர் டிரம்பின் உயர் ஆலோசகருமான எலோன் மஸ்க், தனது சமூக ஊடக தளமான X ஐப் பயன்படுத்தி VOA ஐ மூட வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார்.

அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி வீடற்றவர்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் நூலகங்களுக்கு நிதியளிப்பது உட்பட பல பொது நிறுவனங்களுக்கான நிதியையும் குறைத்து உள்ளார்.

அமெரிக்காவின் பிரதான ஊடகங்கள் தனக்கு எதிராகவும், பாரபட்சமாக இருப்பதாக ஜனாதிபதி தொடர்ந்து கூறி வந்துள்ளார். அதே வேளை டிரம்ப் தனது முதல் பதவிக்காலத்தில் VOA ஐ கடுமையாக விமர்சித்தார். இதனால் சமீபத்தில் USAGM இன் சிறப்பு ஆலோசகராக தீவிர விசுவாசி கரி லேக்கை நியமித்துள்ளார்.

இந்நிலையில் அதிபர் டிரம்ப் ஒரு உரையின் போது அவர் CNN மற்றும் MSNBC நிறுவனங்களை ஊழல் நிறைந்தவை என்றும் குறிப்பிட்டார்.

## நாஜி - ஜப்பானிய எதிர் பிரச்சார ஊடகங்கள்:




இரண்டாம் உலகப்போரின் போது நாஜி மற்றும் ஜப்பானிய பிரச்சாரத்தை எதிர்த்துப் போராடுவதற்கான அரச ஆணையுடன் 1942 இல் வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா தொடங்கப்பட்டது.

1942 இல் வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா தொடங்கப்பட்ட அதன் முதல் ஒளிபரப்பு, பிரித்தானிய பிபிசியால் அமெரிக்காவிற்கு கடன் வழங்கப்பட்ட ஒரு டிரான்ஸ்மிட்டரின் மூலம் ஒலிபரப்பு செய்யப்பட்டது என்பதை பலரும் அறிந்திருக்க மாட்டார்கள்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியான ஜெரால்ட் ஃபோர்டு, ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்க 1976 இல் VOA இன் பொது சாசனத்தில் கையெழுத்திட்டார். இதன் பின்னர் 1994 ஆம் ஆண்டில் இராணுவம் நலன் சார்ந்திராத ஒளிபரப்பை மேற்பார்வையிடும் ஆளுநர்கள் வாரியம் நிறுவப்பட்டது.

இதன் பின்னர் 2013 ஆம் ஆண்டில், புதிய சட்டத்தில் ஏற்பட்ட மாற்றம் ஈநுபு மற்றும் துணை நிறுவனங்கள் அமெரிக்காவில் ஒளிபரப்பை சுயாதீனமாக தொடங்க அனுமதித்தது.

## ஊடகங்களுக்கான அமெரிக்க முகாமை (USAGM)

உலக ஊடகங்களுக்கான அமெரிக்க முகாமை நிறுவனம் (USAGM) தனது மேலாளர்களை பணியை குறைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளது. மனித வளத்தை குறைத்துக் கொண்டு விதிகளுக்கு தேவைப்படும் அளவுக்கு செயல்பாடுகளில் ஈடுபட வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

ரேடியோ ஃப்ரீ ஏசியா மற்றும் ரேடியோ ஃப்ரீ யூரோப் அல்லது ரேடியோ லிபர்டி ஆகிய நிறுவனங்களின் தலைமை அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சல் சிபிஎஸ்-க்கு கிடைத்துள்ளது. இதனில் அந்நிறுவனங்களுக்கான அமெரிக்க அரசின் நிதி உதவி ரத்து செய்யப்பட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# 'பெண்களும் மைதானத்தை பயன்படுத்தும் உரிமை உண்டு' என்ற தொனிப்பொருளில் வலைப் பந்தாட்ட சுற்றுப் போட்டி



(ஹஸ்பர்)

மகளீர் தினத்தை முன்னிட்டு திருகோணமலையில் இயங்கிவரும் பெண்களுக்கான சுதந்திர அமைப்பால் 'பெண்களும்மைதானத்தைபயன்படுத்தும் உரிமை உண்டு' என்ற கருப்பொருளில் வருடந்தோறும் கிராமமட்ட பெண்கள் அமைப்பிற்கிடையில் நடாத்தப்படும் வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இம்முறை 7 அணிகள் பங்கு பற்றிய போட்டியொன்று திருகோணமலை மக்கேய்சர் பொது விளையாட்டு மைதானத்தில் சனிக்கிழமை இடம்பெற்றது.



இதில்இலுப்பைக்குளத்தைபிரதிநிதித்துவபடுத்தி பங்குபற்றிய விக்டரி அணியினர் வெற்றி கிண்ணத்தை சுவீகரித்தனர். இதன்போது வெற்றியீட்டிய அணியினருக்கு கேடயங்களும் பரிசில்களாக வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வின் பிரதம அதிதிகளாக பெண்கள் சிறுவர்கள் பொலிஸ்பிரிவின் பொறுப்பதிகாரி ஜெயமாலி மற்றும் சட்டத்தரணி பிரபாலினி குலசேகரன் , ஈவின்ங்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி காயத்திரி நளினகாந்தன், மேக்கன்டைன் வங்கி நிறுவனத்தின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# புத்தளம் அல் நிஷா மகளிர் சங்கத்தின் மகளிர் தின நிகழ்வுகள் கோலாகலம்



(சியாஜ்)

புத்தளம் அல் நிஷா மகளிர் சங்கத்தின் மகளிர் தின நிகழ்வுகள் அண்மையில் அல் நிஷா மகளிர் சங்க கட்டடத்தில் நடைபெற்றன.

இதன் போது அல் நிஷா அமைப்பின் உறுப்பினர்கள் 10 பேருக்கு சுய தொழிலுக்காக வேண்டி தலா 10 ஆயிரம் ரூபா நன்கொடையாகவும், மேலும் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரம் இரண்டும் சுயதொழில் முன்னேற்றத்திற்காக வழங்கி வைக்கப்பட்டன.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட்ட சிறந்த செயற்பாடாக இது அமைந்துள்ளது.

இதன் போது அல் நிஷா மகளிர் அமைப்பில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுக்கான நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

# சிவனொளிபாதமலைக்கு போதைப்பொருள் கொண்டு சென்ற 14 பேர் கைதாகினர்

(கிஷாந்தன்)

சிவனொளிபாதமலை யாத்திரைக்காக சென்றவர்களில்போதைப்பொருள்களை எடுத்துச் சென்ற சிலர் கைது செய்யப்பட்டனர் என ஹற்றன் பிரதேச பொலிஸ் கண்காணிப்பாளர் பிரதீப் வீரசேகர தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் ஹஷிஷ், கஞ்சா, கஞ்சா கலந்த மோதக மாத்திரைகள் மற்றும் புகையிலை கலந்த மாவா ஆகியவற்றை வைத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிவனொளிபாதமலை யாத்திரையின் போது போதைப்பொருள்கொண்டுசென்றவர்களைகைது செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுடன் இணைந்து, நல்லதண்ணி, மஸ்கெலியா, பொல்பிட்டிய, நோர்டன்பிரிட்ஜ், கினிகத்தேனை மற்றும் நோர்வூட் ஆகிய பொலிஸ் நிலைய பொலிஸாரின் உதவியுடன் இவ்வாறு 14 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பல்வேறு பகுதிகளில் வசிக்கும் சந்தேக நபர்கள் 25-40 வயதுக்குட்பட்டவர்கள் என்றும், அவர்களை ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுதத் நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில், அதிகமான ஒளி சாதனங்கள் பொருத்தப்பட்டு சிவனொளிபாதமலை யாத்ரீகர்களை ஏற்றிச் சென்ற பல தனியார் பஸ்களையும் பொலிஸார் சோதனையிட்டனர்.

மேலும், இந்த பஸ்களில் பொருத்துப்பட்டுள்ள மேலதிகசாதனங்களை அகற்றி அப்புறப்படுத்துமாறு பஸ் ஓட்டுநர்களுக்கு பொலிஸார் இதன்போது எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# யாழில் பெருமளவான கேரளக் கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம் வடமராட்சி - மருதங்கேணி பகுதியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பெருமளவான கேரளக் கஞ்சா மருதங்கேணி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட சுமார் 85 கிலோகிராம் கேரள கஞ்சா அடங்கிய 40 பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன் மதிப்பு 17 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பாக மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர்.



# தையிட்டியில் விகாரை வளாகத்திற்குள் புதிய கட்டடத்தைத் திறக்க ஏற்பாடு



தையிட்டியில் சட்டவிரோதமாக விகாரை அமைக்கப்பட்டிருக்கின்ற அந்த வளாகத்திற்குள் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டிட திறப்பு நடைபெறவிருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக தமிழ்தேசிய மக்கள் முன்னணியின்முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.




# கட்டாக்காலி மாடுகள் அறுக்கப்பட்டு ஏழைகளுக்கு எம்மால் வழங்கப்படும்

## தலைமை வேட்பாளர் நளீர் அபூபக்கர் தெரிவிப்பு



(பாறுக் ஷிஹான்)

வீதியில் மக்களின் போக்குவரத்தினை சீர்குலைக்கும் கட்டாக்காலிமாடுகள்உடனடியாக பிடிக்கப்பட்டு ஏழைகளுக்கு அறுத்து பங்கிடவேண்டிய நிலைமை ஏற்படும் என நாவிதன்வெளி பிரதேச சபை தேர்தலில் கால்பந்து சின்னம் சுயேச்சைக் குழு தலைமை வேட்பாளர் நளீர் அபூபக்கர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்த பின்னர் அம்பாறை மாவட்டம் மத்தியமுகாம் பகுதியில் உள்ள அவரது அலவலகத்தில் நேற்று நடத்திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் -

நாவிதன்வெளி பிரதேச சபை அதிக வரிச் சுமையை மக்களுக்கு விதித்துள்ளது. இது ஒரு பாரிய அநீதி. பிரதேச சபை அதிகாரத்தை மக்கள் எனக்கு வழங்கினால் நிச்சயம் இவைகளுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கப்படும்.கட்டாக்காலி மாடுகள் நாய்கள் வீதிகளில் அதிகளவாக காணப்படுகின்றன.எதிர்காலத்தில் நாவிதன்வெளி பிரதேச சபைக்கு செல்வோமாயின் கட்டாக்காலி மாட்டு உரிமையாளர்களை அழைத்து கலந்துரையாடுவோம்.இதுதவிர கட்டாக்காலி மாடுகளினால் ஏற்படுகின்ற பிரச்சினைகள் குறித்து அவர்களுக்கு அறிவிப்போம்.அவ்வாறு எமது சபையின் ஊடாக விடுக்கப்படும் அறிவுறுத்தலை மீறும் கட்டாக்காலி மாடுகள் உடனடியாக பிடிக்கப்பட்டு ஏழைகளுக்கு அறுத்து பங்கிடவேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை இவ்விடத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.பிரதேச சபை விதித்துள்ள வரிகளை குறைப்பதே திட்டம்.மக்களுக்கு நிச்சயம் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பேன்

நாவிதன்வெளி பகுதியில் 4 இறைச்சி கடைகள் உள்ளன. கேள்வி மனு பல இலட்சமாக உள்ளது. இதனை குறைத்தால் ஒரு கிலோ இறைச்சியை 1800 ரூபாவுக்கு விற்பனைசெய்ய முடியும். வீணாக மக்கள்மீது அதிக வரிச்சுமை பிரயோகிக்கப்பட்டுள்ளது. நாவிதன்வெளி பிரதேச சபை அதிகாரம் எமது குழுவுக்கு கிடைக்கும் பட்சத்தில் ஒரு மாதகால இடைவெளிக்குள் இவற்றுக்கு தீர்வை பெற்றுக் கொடுப்பேன்.

திருமண மண்டபத்துக்கும் அதிக வரி இங்கு அறவிடப்படுகின்றது. அதாவது ஒரு திருமணத்துக்கு 50 ஆயிரம் ரூபா அறியப்படுகின்றது. இதுவும் நிவர்த்தி செய்யப்படும் என்றும் நளீர் அபூபக்கர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 161ஆவது பொலிஸ் வீரர்கள் தினம் வவுனியாவில் வெள்ளி அனுஸ்டிப்பு

வவுனியாவில் அமைந்துள்ள வன்னி பிராந்திய பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்தில் அமைந்துள்ள பொலிஸாரின் நினைவுத்தூபிக்கு அருகே வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் உயிர் நீத்த மற்றும் யுத்தத்தில் உயிரிழந்த பொலிஸாரின் 161 ஆவது பொலிஸ் வீரர்கள் தினம் வன்னி மற்றும் கிளிநொச்சி பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் சமாந்த விஜயசேகர தலைமையில் அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கைப் பொலிஸாரால் வருடா வருடம் கடைப்பிடிக்கப்பட்டுவரும் பொலிஸ்வீரர்கள் தினம் 161 ஆவது தினமாகும். அத்துடன் யுத்த காலத்தில் உயிர் நீத்த பொலிஸாரையும் இத்தினத்தில் நினைவுகூரப்பட்டு வருகின்றனர். வவுனியா பிராந்திய நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் வீரர்கள் நினைவுத்தூபியில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியாமாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமரத்ன விஜயமுனி, வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் அசோக குமார மற்றும் வவுனியா தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி ஜே.ஏ.ஏ.எஸ். ஜெயக்கொடி, உயிரிழந்த பொலிஸாரின் குடும்ப உறுப்பினர்கள், ஓய்வுபெற்ற பொலிஸார், வவுனியா பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா பிரிவிலுள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டு உயிர் நீத்த பொலிஸாருக்கு அஞ்சலி செலுத்தினார்கள். 100









# சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் மகளிர் தினம்

(சுபேசன்)

சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் - தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் ஒழுங்கமைப்பில் வியாழக்கிழமை சாவகச்சேரி கலை கலாசார மண்டபத்தில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

பெண்களை வலுவூட்டி - மகிழ்வூட்டும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட மேற்படி நிகழ்வில் வளவாளராக மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் சிவசுதன் கலந்து கொண்டிருந்தார்.

மேலும் தென்மராட்சிப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.





காலைக்கதிர் Kalaikkathir

## தேர்தல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டு வருவது உண்மை என்று தெரியவந்துள்ளது.

இதேவேளை கிடைக்கப்பெற்றுள்ள அனைத்து முறைப்பாடுகள் தொடர்பிலும் சம்பந்தப்பட்ட பொலிஸ் பிரிவுகளின் கீழ் துரிதமாகவிசாரணைகள்முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றுள்ளது.

## முதல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கானஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகிறார்.

இந்த விந்தணு வங்கிக்கு ஆண்கள் விந்தணுக்களை வழங்க முடியும் என்றும், அதற்காகப் பல சோதனைகளை மட்டுமே மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் கூறப்படுகிறது.

மேலும், யார் விந்துவைப் பெற்றார்கள், யார் கொடுத்தார்கள் என்பதை யாராலும் அறிய முடியாது என்றும் அவர் கூறினார்.

# வேட்புமனுக்கெதிராக முன்வைக்கப்பட்ட அனைத்து ஆட்சேபனைகள் நிராகரிப்பு

## துல்கர் நயீம் தெரிவிப்பு

(அபு அலா)

நாபீர் பௌண்டேஷனின் வருகையால் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிகளுக்குள் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது என்று கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், அம்பாறை மாவட்ட முதலாம் இலக்க சுயேச்சை குழுவில் மாம்பழச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் எம்.எல்.துல்கர் நயீம் தெரிவித்தார்.



இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாபீர் பௌண்டேஷன் தனது உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுவை தாக்கல் செய்தபோது எங்களுக்கெதிராக 4 ஆட்சேபனைகளை முன்வைத்தார்கள்.

இதில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூரினால் 2 ஆட்சேபனைகளும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஐ.எல்.மாஹிரினால் 2 ஆட்சேபனைகளும் முன்வைக்கப்பட்டன.

இந்த இரு கட்சியைச் சார்ந்தவர்களால் முன்வைக்கப்பட்ட குறித்த ஆட்சேபனைகளை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லையென்று நிராகரிக்கப்பட்டு விட்டது.

குறிப்பாக சம்மாந்துறை மக்களை பல வருடங்களாக ஏமாற்றி அவர்களின் வாக்குகளைப்பெற்று அரசியல் செய்த சம்மாந்துறையைச் சேர்ந்த அரசியல் பிரபலங்கள் நாபீர் பௌண்டேஷனின் அரசியல் வருகையைக் கண்டு அஞ்சிய நிலையில் காணப்படுகின்றதை எம்மால் காணக்கூடியதாக உள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் சம்மாந்துறை பிரதேச சபையை நாபீர் பௌண்டேஷனின் சுயேச்சை குழுவான மாம்பழ சின்னம் கைப்பற்றுமளவில் மக்களின் செல்வாக்கு நாளுக்கு நாள் இன்று அதிகரித்து வருகின்றதை அவர்களால் தாங்க முடியாமல் உள்ளது. - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




காலைக்கதிர் Kalaikkathir

# அனுமதி இன்றி மணல் வியாபாரத்தில் ஈடுபட்ட ஒருவர் கிளிநொச்சியில் கைது

கிளிநொச்சி தருமபுர பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட உழவனூர் மற்றும் கல்லாறு பகுதிகளில் அனுமதி இன்றி மணல் யார் அமைத்து மணல் வியாபாரத்தில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் கல்லாறு பகுதியில் பொது இடத்தில் மணல் சேகரித்து வைக்கப் பட்டிருந்த நிலையில் அப்பகுதியில் இருந்த மணலும் பொலீஸாரால் பறி முதல் செய்யப்பட்டுள்ளதுடன் இச்சம்பவத்தின் போது 28 கியூப் மணல் பொலீஸாரால் பறி முதல் செய்யப்பட்டுள்ளதுடன் அதே பகுதியில் இருந்து அனுமதி பத்திரம் இன்றி மணலை ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் ஒன்றும் பொலீஸாரால் பறி முதல் செய்யப்பட்டுள்ளதுடன் அதன் சாரதியும் பொலீஸாரால் செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சாரதி பொலீஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் தடையப் பொருள்கள் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலீஸார் தெரிவித்துள்ளனர். 113

# சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல் வவுனியாவில் இளைஞர் கைது

வவுனியா, தோணிக்கல் பகுதியில் 15 வயது சிறுமி ஒருவருக்கு பாலியல் துன்புறுத்தல் செய்ததாக இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசிக்கும் 15 வயது சிறுமி ஒருவரை அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காதலித்ததாகவும், குறித்த சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல் செய்ததாகவும் சிறுமியின் தாயாரால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞரை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில், நீதமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். 100

# கிளிநொச்சியில் உள்ள வீடொன்றிலிருந்து கெரோயின், ஐஸ் போதைப்பொருள் மீட்பு

## மூன்று பேர் கைது



கிளிநொச்சி பரந்தன் குமரபுரம் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து கெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பரந்தன் குமரபுரம் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து 20.7 கிராம் ஐஸ் மற்றும் 5கிறாம் 75 மில்லிக்கிறாம் கெறோயின் என்பன கிளிநொச்சி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் சந்தேகத்தின் பேரில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நான்கு கையடக்க தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளன.

# குடாநாட்டில் மின்கலங்களை திருடிய குற்றச்சாட்டில் கடற்படை முன்னாள் சிப்பாய் உள்ளிட்ட ஐவர் கைது

யாழ்ப்பாணத்தில் உள்ள தொலைத் தொடர்பு கோபுரங்களின் மின் கலங்களை தொடர்ச்சியாக திருடிய குற்றச்சாட்டில் கடற்படையின் முன்னாள் சிப்பாய் உள்ளிட்ட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கைத்தொலைபேசி தொலைத்தொடர்பு வலையமைப்புக்களின் தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கு பொருத்தப்பட்டிருந்த மின் கலங்கள் தொடர்ச்சியாக களவாடப்பட்டு வந்துள்ளன.

இது தொடர்பில், கோபுரங்கள் அமைந்துள்ள பகுதிகளுக்குரிய பொலிஸ் நிலையங்களில், குறித்த நிறுவனங்கள் முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளன.

முறைப்பாடுகளின் பிரகாரம் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், மின்கலன்களை களவெடுத்தவர்கள் அம்பாறை பகுதியில் பதுங்கியிருப்பதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற விசேட பொலிஸ் குழுவினர் சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை அம்பாறையில் இருந்து கோப்பாய் பொலிஸ் நிலையம் கொண்டு வந்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த வேளை கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் கடற்படை முன்னாள் சிப்பாய் எனவும், மற்றுமொருவர் களவாடப்பட்ட மின் கலங்களை கொள்வனவு செய்தவர் எனவும் ஏனைய மூவரும் களவுக்கு உடந்தையாக செயற்பட்டவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் மாத்திரம் 192 மின் கலங்களை களவாடியுள்ளனர் எனவும், மின்கலம் ஒன்றின் பெறுமதி சுமார் ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிகம் என பொலிஸார் தெரிவித்தனர்.

# டீசலை அருந்திய ஆண் குழந்தை பரிதாபச் சாவு

யாழில் டீசலை அருந்திய ஆண் குழந்தை ஒன்று சனிக்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளது.

ஊர்காவற்துறை, நாரந்தனை தெற்கு பகுதியைச் சேர்ந்த ஒரு வயது 9 மாதங்கள் நிரம்பிய குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

கடந்த 18ஆம் திகதி குழந்தையின் தந்தை லான்ட்மஸ்டர் திருத்த வேலையில் ஈடுபட்டுள்ளார். பின்னர் டீசலை ஒரு போத்தலில் வைத்துவிட்டு சென்றுள்ளார்.

இதன்போது அவ்விடத்திற்கு வந்த குழந்தை சோடா என நினைத்து டீசலை அருந்தியது. இந்நிலையில் குழந்தை மயக்கமுற்றது. பின்னர் குழந்தை ஊர்காவற்துறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குழந்தை சிகிச்சை பலனின்றி சனிக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் உயிரிழந்தது. குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

# சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



(சுபேசன்)

இலங்கை ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவனத்தின் உத்தியோகத்தரும் - தென்மராட்சியைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளருமான மதியழகன் நிஷாந் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இவர் அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி முன்னிலை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சிறைச்சாலையிலிருந்து ஒருவர் தப்பியோட்டம்

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நபர் ஒருவர் சனிக்கிழமை தப்பி ஓடியுள்ளார் எனப் பொலிசார் தெரிவித்தனர்.

வவுனியாவில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், குறித்த நபருக்கு விளக்கமறியல் வழங்கப்பட்டது.

இந்நிலையில் வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியல் வைக்கப்பட்ட நபரே இவ்வாறு தப்பி ஓடியுள்ளார். குறித்த நபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை வவுனியா சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் வவுனியா பொலிஸார் ஆகியோர் மேற்கொண்டு வருகிறார்கள்.




# உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு முல்லையில் தமிழ் அரசுக் கட்சியினர் கலந்தாய்வு

உள்ளூராட்சிசபைத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட நிர்வாகத்தினருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் வேட்பாளர்களுக்குமிடையில் சனிக்கிழமை கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

அந்தவகையில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட செயலாளரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான துரைராசா ரவிகரனின் தலைமையில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடல்களில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, துணுக்காய், மாந்தைகிழக்கு ஆகிய நான்கு உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிடும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் வேட்பாளர்கள் மற்றும் அந்தந்த பிரதேச இலங்கைத்



தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சி உள்ளூராட்சிசபைத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வதென்பது தொடர்பில் பேசப்பட்டதுடன், வேட்பாளர்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பது தொடர்பிலான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

அத்தோடு இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி கைப்பற்றுவதற்கான வியூகங்களும் வகுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



# திருகோணமலை மூதூர் பிரதேசத்தில் ரூ. 5000 போலி நாணயத்தாள் புழக்கம்

(றிஸ்னாத்)

திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசத்தில் 5000 ரூபா போலி நாணயத்தாள்கள் புலக்கத்தில் இருப்பதாக தகவல் வெளியாகிய நிலையில் சனிக்கிழமை ஒரு வர்த்தக நிலையத்தில் மாற்றப்பட்ட போலி நாணயத்தாளின் புகைப்படம் கிடைத்துள்ளது.

இந்த புகைப்படம் போலி நாணயத்தாள்களின் பரவலை உறுதிப்படுத்துவதுடன் பொதுமக்கள் மேலும் அவதானமாக செயற்பட வேண்டிய அவசியத்தையும் முக்கியத்துவம் காட்டுகிறது.

வர்த்தகர்கள் தங்களது பரிவர்த்தனைகளின் போது நாணயத்தாள்களின் உண்மைத்தன்மையை சோதிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அதிகாரிகள் இந்த விவகாரத்தில் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றதுடன் சந்தேகத்திற்கிடமான நாணயங்கள் இருப்பின் உடனடியாக அருகிலுள்ள பொலீஸ் நிலையத்தில் தகவல் வழங்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.





# இப்தார் கொண்டாட்டம்

(நூருல் ஹுதா உமர்)

யூ.எஸ்.எப். ஸ்ரீலங்கா சமூக சேவை அமைப்பின் 2025 ஆண்டுக்கான வருடாந்த இப்தார் நிகழ்வு அமைப்பின் ஸ்தாபக தலைவரும், இளைஞர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், இளைஞர் சேவை அதிகாரியுமான அ. கபூர் அன்வர் தலைமையில் சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் நோன்பின் மாண்புகளை பற்றி மௌலவி எம்.ஐ. சஹ்பி (ஹாமி) மார்க்க சொற்பொழிவு நிகழ்த்தினார். இதன்போது, சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசல் செயலாளர் எந்திரி எம்.எம். முனாஸ், மாளிகைக்காடு ஜும்மா பள்ளிவாசல் செயலாளர் ஊடகவியலாளர் நூருல் ஹுதா உமர், ஜும்மா பள்ளிவாசல் மற்றும் பிரதேச பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்கள், சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி எம்.ரீ.எம். ஹாரூன், அரச திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், பிரதேச சமூக நல அமைப்புகளின் பிரதானிகள், விரிவுரையாளர்கள், யூ.எஸ்.எப். ஸ்ரீலங்கா சமூக சேவை அமைப்பின் ஆலோசகர்கள், யூ.எஸ்.எப். ஸ்ரீலங்கா சமூக சேவை அமைப்பின் முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் , யூ.எஸ்.எப்.ஸ்ரீலங்கா சமூக சேவை அமைப்பின் செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.





# இப்தார் உலர் உணவு பொதி வழங்கல்

(அஷ்ரப்கான்)

சாய்ந்தமருது நூறாணியா மகளிர் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்த இப்தார் மற்றும் உலர் உணவுப்பொதி வழங்கி வைக்கும் நிகழ்வு கல்முனை மயோன் பிளாசா மண்டபத்தில் அன்மையில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏஎல்முஸ் பிறாவின் நெறிப்படுத்தலில் நூறாணியா மகளிர் சங்க தலைவி பெரோஸா காரியப்பர் தலைமையில் இடம்பெற்ற

இந்நிகழ்வில் அதிதிகளாக, சம்மாந்துறை பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.எம்.அஸ்லம், சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் றம்சான், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மொஹம்மட், சைனிங் ஸ்டார் அமைப்பின் தலைவி தஸ்னீம் காரியப்பர், பிரதிநிதிகளான முன்னாள் மாநகர சபை உறுப்பினர் பஷீரா றியாஸ், சட்டத்தரணி ஆயிஷா, ஜெஸீமா, தென்கிழக்குப் பல்கலைக்கழக ஜெல்மின் மற்றும் கல்முனை ஸாஹிறா தேசிய பாடசாலை ஓய்வுபெற்ற ஆசிரியர் ஏ.எல்.எம்.ஹம்ஸா, அம்பாறை தபால் அதிபர் பைசர், சம்மாந்துறை

நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர், ஐ. ஜாபீர் கல்முனைக்குடி-04 கிராம அபிவிருத்தி சங்க தலைவர் ஏ.எம்.நசிர்

ஆகியோருடன், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மகளிர் சங்க அங்கத்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வுக்கான அனுசரணையினை கட்டாரில் வசிக்கும் எம்.என். எம்.ஜஸாஉல் சுஜாஹ் ஸீத்னா அபாத், கணக்காளர் ஏ.எம்.ஆப்தீன், செறுான் ஆப்தீன், ஆஸ்திரேலியாவில் வசிக்கும் வைத்தியர் இர்ஸாத் றஹீம், அமானா இர்ஷாத் மற்றும் வர்த்தகர் ஒருவரும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இங்கு விசேட பயான் மற்றும் துஆபிரார்த்தனையை அல் ஹாபிழ் ரியாஸ், மௌலவி சஜாத் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

இதன்போது நூறாணியா மகளிர் சங்க அங்கத்தவர்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.



காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியாவில் சிறப்பாக இடம்பெற்ற வவுனியா சங்கமம் அறிமுக விழா!

## வவுனியா சங்கமம் அறிமுக விழா மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட பழைய மாணவர் ஒன்றியம் "வவுனியா சங்கமம்" என்ற பெயரைக் கொண்டு இங்கிலாந்தில் சென்ற ஆண்டு முதல் இயங்கி வருகின்றது. தேசத்தின் உறவுகளாக இங்கிலாந்தில் ஒன்று கூடி மகிழ்வது மட்டுமல்லாமல் தேசத்தின் மாணவச் செல்வங்களின் கல்வி மேம்பாட்டிலும் எல்லைப் புறக் கிராமங்களின் முன்னேற்றத்திலும் பங்கு கொள்வதற்குமாக உருவாக்கப்பட்ட 'வவுனியா பழைய மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வவுனியா நகரசபை மாநாட்டு மண்டபத்தில் சனிக்கிழமை இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, 25 முன்பள்ளிகளுக்கான தொலைக்காட்சி மற்றும் பென் டிரைவ் வழங்கி வைக்கப்பட்டதுடன், 'சங்கமம் 2024' நூல் அறிமுகமும் இடம்பெற்றது. அத்துடன் கலை



கலாசார நிகழ்வுகளும் சிறப்பான முறையில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், ப.சத்தியலிங்கம், முத்து முகமது, பிரதேச செயலாளர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், வவுனியா மாவட்ட பழைய மாணவர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். 100







# உப்புவெளி கமநல சேவைகள் நிலையத்தின் இப்தார் நிகழ்வு

(முபீன், அபு அலா)

திருகோணமலை - உப்புவெளி கமநல சேவைகள் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு உப்புவெளி கமநல சேவைகள் அலுவலகத்தில் இடம்பெற்றது.

கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் துதர்சானந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த இப்தார் நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக கமநல சேவைகள் குழுத்தலைவர் சி.சிவராசா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதில் கப்பல்துறை கமக்கார அமைப்பு, முத்துநகர் கமக்கார அமைப்பு, தகரவெட்டுவான் கமக்கார அமைப்பு, மத்தியவெளி கமக்கார அமைப்பு, ஆண்டாங்குளம் கமக்கார போன்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.03.2025இல் வெளியிடப்பெற்றது